**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 131/2021**
**DW1**

| | | |
|---|---|---|
| Name | : | அபினேஷா |
| Father's/Husband's Name | : | ரமேஷ் |
| Village | : | |
| Taluk/District | : | மங்கலம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.04.2025
A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பி.ஏ, பி.எட் படித்து கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 வது எதிரி கார்த்திகேயன் என் அம்மாவின் உடன் பிறந்த தங்கையின் கணவர் . 2 வது எதிரி சரண்யா என் அம்மா. 3 வது எதிரி ராஜசேகர்என் அம்மாவின் அண்ணன் . எதிரிகள் மீது கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும் . என் அப்பா ரமேஷை கொலை செய்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் . என் அப்பா எந்த தேதியில் இறந்தார் என்றால்அதை குறிப்பிட்டு சொல்ல முடியாது . 08.03.2017 மதியம் 2.00 மணிக்கு என் அப்பா இறந்துவிட்டதாக தகவல் தெரியவந்தது . அப்போது நான் என் பாட்டி வீட்டில் இருந்தேன். அப்போது என்னுடன் அம்மா, தாத்தா, பாட்டி, மாமா ஆகியோர் இருந்தார்கள். என் அப்பா இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பிருந்தே நானும் என் அம்மாவும் என் பாட்டி வீட்டில் தான் இருந்தோம் . அந்த 3 வருடமாக என் அப்பா தென்னைமரம் குறுக்கு தெருவில் உள்ள ஒரு வாடகை வீட்டில் அவர் மட்டும் இருந்தார். எதனால் நாங்கள் ஒரு இடத்திலும் என் அப்பா ஒரு இடத்திலும் இருந்தோம் என்று கேட்டால் என் அப்பா டைலர் கடை வைத்திருந்தார். அங்கு வரும்

பெண்களிடம் என் அப்பா தவறாக நடந்து கொள்வதாக சில பெண்கள் என் அம்மாவிடம் சொன்னதால் சண்டை ஏற்பட்டு பிரிந்துவிட்டோம் . என் அப்பாவிற்கு குடிப்பழக்கம் இருந்தது. 07.03.2017 அன்றும் என் அப்பா இறந்த தகவல் கிடைத்த 08.03.2017 அன்றும் என் அம்மா என்னுடன் என் பாட்டி வீட்டில் இருந்தார் . சாட்சி ரவி, மீனா, பிச்சைக்காரன் , பாஸ்கரன், பாலமுருகன், அமலா ஆகியோருக்கும்எங்களுக்கும் இப்போது உறவுமுறை சரியாக இல்லை. என் அம்மா அப்பாவை பிரிந்தது சம்மந்தமாக அவர்கள் அவ்வப்போது என் அம்மாவை தொந்தரவு செய்ததால் அது பகையாக மாறியது . என் பாட்டி வீடு பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது. என் பாட்டி வீட்டிற்கும் என் அப்பா குடியிருந்த வீட்டிற்கும் இடையே சுமார் 100 மீ இருக்கும் . வழக்கில் சொல்லியவாறு என் அம்மா சரண்யாவிற்கும் எதிரி கார்த்திகேயனுக்கும் எந்தவித கள்ள உறவும் ஒருபோதும் இருந்ததில்லை. என் அப்பாவின் இறப்பிற்கு என்ன காரணமாக இருக்கலாம் என்று கேட்டால் அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் அல்லது அவர் தவறாக நடந்து கொண்ட பெண்கள் தரப்பில் யாராவது ஏதாவது செய்திருக்கலாம் அல்லது ஊரில் உள்ள என் அப்பாவின் விரோதிகள் யாராவது அவரை கொன்றிருக்கலாம்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி கார்த்திகேயன்தான் என் படிப்பிற்கு செலவு செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த 07.03.2017 முதல் 08.03.2017 மதியம் வரை நாங்கள் யாரும் அவர் பிரேதத்தை பார்க்கவில்லை. எதிரிகள் மூவரும் சேர்ந்துதான் என் அப்பாவை கொலை செய்தார்கள் என்றும் , அதை தெரிந்துகொண்டுதான் மறுநாள் மதியம் தகவல் வந்ததாக உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல . மீனா என்பவர் எனது தந்தையின் அக்கா . என் அப்பாவுக்கும் என் அத்தை மீனாவுக்கும் சொந்தமான வீடு உள்ளது. ஆரம்ப காலத்தில் அந்த வீட்டில்தான் நான் என் அப்பா , அம்மா அனைவரும் மகிழ்ச்சியாக குடியிருந்தோம் என்றால் சரிதான் . என் அம்மாவிற்கும் 1வதுஎதிரி கார்த்திகேயனுக்கும் தொடர்பு ஏற்பட்டது என்றும் , அந்த உறவை தொடர்வதற்காகதான் என் அம்மாவும் அப்பாவும் தனிக்குடித்தனம் சென்றார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா டெய்லர் வேலைக்கு சென்றபோது தான் எதிரி கார்த்திகேயன் அந்த வீட்டிற்கு வந்துபோவார் என்றால் அதை நான் மறுக்கிறேன். 08.03.2017 அன்று என் அம்மா என் வீட்டில் இருந்தார் . மதியம் அவரை போலிஸ் அழைத்து சென்றார்கள் . 07.03.2017 அன்று இரவு என் சித்தப்பா கார்த்திகேயன் என் அம்மா மற்றும் ராஜசேகர் ஆகியோர் என் அப்பாவை

கொலைசெய்துவிட்டார்கள் என்றால் நான் அதை மறுக்கிறேன் . அன்று இரவு என் அம்மா என்னுடன்தான் இருந்தார் . அன்று இரவு நான் தூங்கினேனா என்றால் தூங்கிவிட்டேன். போலிசார் என் அம்மாவை கைது செய்தபோது ஏன் அவர்களை கைது செய்தீர்கள் என்று விசாரித்தேன் . என் அம்மாவை என்னிடம் காண்பிக்கவில்லை . தவறுசெய்யாத என் அம்மாவை போலிசார் கைது செய்ததற்காக போலிசார் மீது நடவடிக்கை எடுக்க நான் மனு ஏதாவது கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என் அப்பா தவறாக நடந்துகொண்டதாக என் அம்மாவிடம் புகார் கொடுத்த நபர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது . என் அப்பா இறப்பதற்கு சுமார் 3 வருடத்திற்கு முன் அவ்வாறு டைலர் கடைக்கு வந்த பெண்கள் என் அப்பாவை பற்றி என் அம்மாவிடம் கூறினார்கள் . என் அப்பா என் அம்மாவின் தவறாக நடத்தையை தான் கண்டித்தாரே தவிர என்அம்மாவை அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நடக்கும் விவரம் எனக்கு தெரியும் . நான் வக்கீலை பார்க்க போனதில்லை. சம்பவம் நடந்தபோது எனக்கு 13-14 வயது இருக்கும். என் தங்கைக்கு அப்போது 8 வயது இருக்கும். என்னை விசாரிக்கவேண்டும் என்றும், நான் வாக்குமூலம் கொடுக்க தயாராக இருக்கிறேன் என்றும் நான்போலிசாரிடம் தெரிவிக்கவில்லை. என் அம்மாவை பொய்யாக கைது செய்துவிட்டார்கள் என்று போலிஸ் உயர்அதிகாரிகளுக்கோ , மாவட்ட ஆட்சியருக்கோமனு எதுவும் அனுப்பவில்லை. சொந்தவீடு இருக்கும்போது என் அப்பாவுடன் ஏன் வாடகை வீட்டிற்கு சென்றோம் என்றால் என் அப்பாவுடன் அந்த சொத்தில் மற்ற 2 நபர்களுக்கும் பங்கு இருந்தது . பாகத்தை பிரித்துக்கொண்டு பின்னர் வீடு கட்டிக்கொள்ளலாம் என்று வாடகை வீட்டிற்கு குடியேறினோம் . நான் மட்டும் என் பாட்டி வீட்டில் இருந்தேன் . என் அப்பாவும் அம்மாவும் வாடகை வீட்டில் சுமார் 6 மாதம் குடியிருந்தார்கள். என் அப்பாவிற்கு குடிப்பழக்கம் இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல . என் அம்மாவிற்கு எதிரி கார்த்திகேயனுடன் கள்ளத்தொடர்பு இருந்தது என்றும் , அதை என் அப்பா கண்டித்ததால் எதிரிகள் மூவரும் சேர்ந்து என் அப்பாவை கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல . என் அப்பா தற்கொலை செய்து கொண்டார் அல்லது பிற எதிரிகளால் கொலை செய்யபட்டிருக்கலாம் என்பதை இதுவரை போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . அது போன்ற மனு எதுவும் நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நானும் என் அம்மாவும் இந்த வழக்கு பற்றி பேசிக்கொள்வோம். என் அம்மாவையும் ,என்னை படிக்கவைக்கும் என் சித்தப்பாவையும் என்

மாமாவையும் காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.